# DFCC விசேட வைப்புக் கணக்கு
# முக்கிய தகவல்கள் ஆவணம்

## DFCC வங்கியுடனான விசேட வைப்புக் கணக்கு பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

நீங்கள் ஏற்கனவே DFCC வங்கியில் விசேட வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்திருந்தால் அல்லது அவ்வாறு செய்யத் திட்டமிட்டிருந்தால், அதன் மூலம் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அக் கணக்கின் சிறப்பம்சங்களை உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்

**உள்ளடக்கம்**


| இலக்கம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | விசேட வைப்புக் கணக்கு என்றால் என்ன? | 3 |
| 2. | விசேட வைப்புக் கணக்குகளை யார் ஆரம்பிக்க முடியும்? | 3 |
| 3. | விசேட வைப்புக் கணக்கின் தனித்துவமான சிறப்பம்சங்கள் | 4 |
| 4. | வட்டி | 4 |
| 5. | வட்டியின் மீதான இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி (WHT) | 5 |
| 6. | அனுமதிக்கப்பட்ட வரவுகள் | 5 |
| 7. | அனுமதிக்கப்பட்ட பற்றுகள் | 5 |
| 8. | ஏனைய நிபந்தனைகள் | 5-6 |
| 9. | விசேட வைப்புக் கணக்கை முதிர்ச்சிக்கு முன்பே மீளப்பெறுதல் | 6 |
| 10. | விசேட வைப்புக் கணக்கின் பேரிலான வடன் வழங்கல் | 6 |
| 11. | நியமனம் | 6 |
| 12. | விசேட வைப்புக் கணக்கொன்றை முன்கூட்டியே மூடுதல் | 6 |
| 13. | எம்முடன் தொடர்புகொள்ளும் முறை | 7 |

**1. விசேட வைப்புக் கணக்கு என்றால் என்ன?**

விசேட வைப்புக் கணக்கு (SAD) என்பது 2020 ஏப்பிரல் 08ஆம் திகதிக்குரிய 2170/4ஆம் இலக்க (அதிவிசேட) அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்கள், 2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டத்தின் 9ஆம் பிரிவு, வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைத் திணைக்களம் (DFE) விடுத்த 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் என்பவற்றிற்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு கணக்காகும்.

வங்கியியல் அமைப்பின் ஊடாக வெளிநாட்டிலிருந்து கணக்கு வைப்பாளரின் பெயருக்கு அனுப்பப்படும் பணத்தைக் கொண்டு குறித்துரைக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாயில் நிலையான வைப்பு என்ற முறையில் இந்த விசேட வைப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

SDA கணக்கை **2020 ஏப்பிரல் 09 முதல் 2020 ஒக்டோபாட 09 வரையான காலப்பகுதியில் மட்டுமே** ஆரம்பிக்க முடியும்.

**2. விசேட வைப்புக் கணக்குகளை யார் ஆரம்பிக்க முடியும்?**

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் (இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களும் உட்படுவர்), இலங்கையை மூலவிடமாகக் கொண்ட ஏனைய நாடுகளின் பிரஜைகள், இலங்கைக்கு வெளியே வசிக்கும் எவரேனும் நபர்கள் ஆகியோரும் இலங்கைக்கு வெளியிலுள்ள நிதியங்கள், நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் நலன் விரும்பிகளும் இக் கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

**புதிய வாடிக்கையாளர்களுக்கு**

உங்கள் விசேட வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள் அல்லது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

நீங்கள் இலங்கையில் வசிக்காத ஒருவராக இருந்தால், எமது வலைத்தளத்திலுள்ள ஒன்லைன் தளத்தின் ஊடாக விபரங்களை நிரப்பி எமக்குச் சமா்ப்பிக்கலாம். தேவையான விபரங்கள் உரிய கிளைக்குச் சமா்ப்பிக்கப்படும் என்பதுடன், அதன் பின்ன் மேலதிக நடவடிக்கைக்காக வங்கி அலுவலா்கள் உங்களுடன் தொடா்புகொள்வாா்கள்.

**தற்போதய வாடிக்கையாளா்களுக்கு**

வங்கியுடன் ஏற்கனவே தொடா்பை வைத்திருக்கும் வாடிக்கையாளா் என்ற முறையில், நீங்கள் உங்களுக்கு வசதியான DFCC வங்கிக் கிளை ஒன்றிற்குச் சென்று, இந்த விடயம் தொடா்பில் விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள அலுவலா் ஒருவருடன் பேசுங்கள்.

**முதலீட்டிற்கான நியமன வசதி**

உங்கள் DFCC விசேட FD கணக்கிற்கென இன்னுமொருவரை நியமிக்க நீங்கள் விரும்பினால், கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் அல்லது ஆரம்பித்த பின் அவ்வாறு செய்யலாம். நியமிக்கப்படுவரின் விபரங்கள் அவருக்குக் கிடைக்க வேண்டிய சதவீதம் மற்றும் உங்கள் கணக்கு விபரங்கள் நியமனப் படிவத்தில் நிரப்பப்பட வேண்டும். நீங்கள் செல்லும் கிளையிலுள்ள எமது அலுவலா் ஒருவருடன் இது சம்பந்தமாகப் பேசுங்கள். அவா் உங்களுக்கு உதவுவாா்.

**3.. விசேட வைப்புக் கணக்கின் தனித்துவமான சிறப்பம்சங்கள்**

இதோ, இத் திட்டத்தின் சில சிறப்பம்சங்கள்

- குறைந்தபட்ச காலப்பகுதி ஆறு (06) மாதங்கள்.

- வழங்கப்படும் வட்டி: 6 மாத மற்றும் 12 மாத SDA வைப்புகளுக்கு, அது போன்ற காலப்பகுதிகளைக் கொண்ட சாதாரண வைப்புகளுக்கு முதிர்ச்சியில் வழங்கப்படுவதைவிட, முறையே 1 சதவீதமும் 2 சதவீதமும் கூடுதலான வருடாந்த வட்டி வழங்கப்படும்.
- நிதியைத் திருப்பிக்கொடுத்தல்: வைப்புக் காலம் முதிர்ச்சியடைந்ததும் பணத்தை இலகுவாக மாற்றி இலங்கைக்கு வெளியே அனுப்பலாம்.
- சகல தரப்பினரும் தகுதி நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் விசேட வைப்புக் கணக்குகளைக் கூட்டாகவும் ஆரம்பிக்க முடியும்.
- உங்களுக்கு ஒரு வைப்புப் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.இதில் வைப்புத் தொகை, காலம், வட்டி வீதம் ஆகிய விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். இப் பற்றுச்சீட்டு அடகு வைக்க அல்லது கைமாற்ற முடியாத ஒரு பத்திரமாகும்.
- கீழே தெரிவிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அமைவாக மாத்திரம் இக் கணக்கில் வரவுகளையும் பற்றுகளையும் செய்ய முடியும்.

**4. வட்டி**

உங்கள் SDA கணக்கிற்கான வட்டி வீதங்கள், நடப்பிலுள்ள சந்தை வீதங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் கொள்கை வீத மாற்றங்களுக்கும் அமைவாக, வங்கியினால் நிர்ணயிக்கப்படும்.

2020 மே 15இல் இருந்தவாறு தற்போது ஏற்புடைய வட்டி வீதங்கள் பின்வருமாறு:

- 6 மாதகால வைப்புக்கு – வழமையான வட்டி வீதத்தைவிட 1% கூடுதலாக வழங்கப்படும்.
- 1 வருடகால வைப்புக்கு – வழமையான வட்டி வீதத்தைவிட 2% கூடுதலாக வழங்கப்படும்.

இற்றைப்படுத்திய வட்டி வீதங்களை அறிய, www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தைப் பாருங்கள்.

வட்டியானது நாளாந்த அடிப்படையில் கணிக்கப்பட்டு, வைப்பின் முதிர்ச்சியின்போது வரவு வைக்கப்படும்

ஸ்டேர்லிங் பவுண்ட் மற்றும் சிங்கப்பூர் டொலருக்கான வட்டி ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற அடிப்படையிலும் ஏனைய நாணயங்களுக்கான வட்டி ஆண்டுக்கு 360 நாட்கள் என்ற அடிப்படையிலும் கணிக்கப்படும்.

**5. வட்டியின் மீதான இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி (WHT)**

இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, இடைநிறுத்திவைக்கப்பட்ட வரியானது, தகுதியெனின், உரிய வரி மதிப்பீட்டு ஆண்டிற்கெனக் கழித்துக்கொள்ளப்பட்டு, இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படும்.

வரி மதிப்பீட்டு ஆண்டு என்பது ஒரு குறிப்பிட்ட ஆண்டின் ஏப்பிரல் 1ஆம் திகதியிலிருந்து அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து அருகிலுள்ள DFCC வங்கிக் கிளையை நாடவும்.

**6. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

- வங்கியியவ் அமைப்பினூடாக கணக்கு வைப்பாளரின் பெயருக்கென இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படும் உள்வரும் அனுப்பீடுகள்.
- உள்வரும் முதலீட்டுக் கணக்குகள் (IIA) மற்றும் கடலகடந்த வங்கிச் சேவைப் பிரிவில் கணக்கு

வைப்பாளரினால் பேணப்படும் கணக்குகளுக்கு, பிரமாணத் திகதியிலிருந்து செய்யப்படும் பரிமாற்றங்கள்.

**7. அனுமதிக்கப்பட்ட பற்றுகள்**

- கால வைப்பு முதிர்ச்சியடைந்ததும் மொத்த முதிர்ச்சித் தொகையின் வெளிச்செல்லும் அனுப்பீடு. கால
- SDA கால வைப்பின் முதிர்ச்சித் தொகையை, உள்வரும் முதலீட்டுக் கணக்கு ஒன்றிற்கு அல்லது கடல்கடந்த வங்கிச் சேவைப் பிரிவில் அதே கணக்கு வைப்பாளரினால் பேணப்படும் கணக்கு ஒன்றிற்கு மாற்றுவதற்கான பரிமாற்றம்.
- இலங்கையில் இலங்கை ரூபாயிலான கொடுப்பனவுகள்.

**8. ஏனைய நிபந்தனைகள்**

- உள்வரும் முதலீட்டுக் கணக்கு ஒன்றின் அல்லது கடல்கடந்த வங்கிச் சேவைப் பிரிவில் அதே கணக்கு வைப்பாளரினால் பேணப்படும் கணக்கு ஒன்றின் ஊடாக பணம் பெறப்படும் பட்சத்தில், அத்தகைய பணம் இலங்கைக்கான உள்வரும் அனுப்பீடாக இருத்தல் வேண்டும்.
- இலங்கையில் இலங்கை ரூபாயில் கொடுப்பனவு செய்வதற்காக மீளப்பெறப்பட்ட பணத்தை SDA கணக்கில் மீண்டும் வரவு வைக்க முடியாது.
- கணக்கு வைப்பாளரின் பெயருக்கான வெளிச்செல்லும் அனுப்பீடுகள், SDA கணக்கு பேணப்படும் வங்கி தவிர்ந்த வேறொரு வங்கியின் ஊடாகவும் மேற்கொள்ளப்படலாம். ஆனால், அவ்வாறு செய்யப்படுவதற்கு முன்னர், அவ்வாறு அனுப்பப்படும் பணம் கணக்கு வைப்பாளரின் SDA கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்டது எனவும் பிரமாணத்திற்கு அமைவாக வரவு வைக்கப்பட்ட பணத்திலிருந்தே அத் தொகை பெறப்பட்டது எனவும் SDA கணக்கு பேணப்படும் வங்கியிடமிருந்து ஊர்ஜிதப்படுத்தல் பெறப்படுவது அவசியமாகும்.

**9. விசேட வைப்புக் கணக்கை முதிர்ச்சிக்கு முன்பே மீளப்பெறுதல்**

நீங்கள் வங்கிக்கு எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், உங்கள் விசேட வைப்புக் கணக்கிலுள்ள பணத்தை முதிர்ச்சிக்கு முன்பே மீளப்பெற முடியும். இது அனுமதிக்கப்படுகின்றபோதிலும், முதலீடானது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரை நடைமுறையில் இருக்கவில்லை என்பதால் வட்டியானது குறைக்கப்படும்.

உங்கள் விசேட வைப்புக் கணக்கு வேறு ஒருவருடன் அல்லது பலருடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட கூட்டுக் கணக்காக இருப்பதுடன், ''அனைவரும் கையொப்பமிட வேண்டும்'' என்ற செயற்பாட்டு அறிவுறுத்தலையும் கொண்டிருந்தால், பணத்தை மீளப்பெறும்/இடமாற்றம் செய்யும் சந்தர்ப்பத்தில் உங்கள் தேவையை நிறைவேற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் வங்கியில் சமுகமளிப்பது கட்டாயமாகும்.

உங்கள் கூட்டுக் கணக்கு ''எந்தவொரு தரப்பும் கையொப்பமிடலாம்'' என்ற செயற்பாட்டு அறிவித்தலைக் கொண்டிருந்தால், ஒரு தரப்பின் கையொப்பத்துடன் பணத்தை மீளப்பெறலாம்.

**10. விசேட வைப்புக் கணக்கின் பேரிலான கடன்கள்**

கடன் வழங்கல் திட்டத்திற்கு ஏற்புடைய நிபந்தனைகளுக்கு அமைவாக, நீங்கள் உங்களுடைய விசேட வைப்புக் கணக்கின் பேரில் கடனை அல்லது மேலதிகப் பற்றைப் பெற முடியும்.

இக் கடன் வசதியைப் பெறுவதற்கு, நீங்கள் விண்ணப்பப் படிவம் ஒன்றை முறைப்படி நிரம்புவதுடன் எதிரீட்டுக்கான கடிதம் ஒன்றையும் வழங்க வேண்டும்.

**11. நியமனம்**

உங்கள் விசேட வைப்புக் கணக்கிற்கென இன்னுமொருவரை நியமிக்க நீங்கள் விரும்பினால், கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் அல்லது ஆரம்பித்தவுடன் அவ்வாறு செய்யலாம். நியமிக்கப்படுவரின் விபரங்கள் அவருக்குக் கிடைக்க வேண்டிய சதவீதம், உங்கள் கணக்கு விபரங்கள் என்பன நியமனப் படிவத்தில் நிரப்பப்பட வேண்டும். நீங்கள் செல்லும் கிளையிலுள்ள எமது அலுவலர் ஒருவருடன் இது சம்பந்தமாகப் பேசுங்கள். அவர் உங்களுக்கு உதவுவார்.

**12. பாத்தியத்தின் கீழ் விசேட வைப்புக் கணக்கை முன்கூட்டி மூடுதல்/மூடுதல்**

நீங்கள் உங்களுடைய விசேட வைப்புக் கணக்கின் பேரில் ஏற்கனவே ஒரு கடனை அல்லது மேலதிகப் பற்றைப் பெற்றிருக்கும் பட்சத்தில், விசேட வைப்புக் கணக்கிலுள்ள பணத்தை எடுத்துக்கொள்ள விரும்பினால், முதல் நடவடிக்கையாக உங்கள் தேவையைக் குறிப்பிட்டு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை வங்கிக்குச் சமர்ப்பிப்பது அவசியம்..

உங்கள் விசேட வைப்பை மீளப்பெறுவதற்கு முன்னர், கடன் அல்லது மேலதிகப் பற்றுக்காக பிணை என்ற நிலையிலிருந்து உங்கள் வைப்பு செயலிழந்துவிடும். எனவே, நீங்கள் பெற்ற ஏதேனும் கடனின் அல்லது மேலதிகப் பற்றின் நிலுவைகளும் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் அறவீடுகளும் உங்கள் வைப்பிலிருந்து கழிக்கப்படும்.

**13. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். எமது கிளை ஒன்றிற்கும் நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.